அந்தரங்கமானது

OLD

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2020

## பழைய பாடத்திட்டம்

## 51 - சித்திரம்

Department of Examinations



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# புள்ளி வழங்கும் திட்டம் - 2020

## பழைய பாடத்திட்டம்

## I, II, III

## 51 - சித்திரக்கலை

**சித்திரக்கலை** I

இவ்விடைத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. பகுதி I - 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளதுடன் பகுதி II - 07 வினாக்களை கொண்டுள்ளது. பல்தேர்வு வினா கட்டாய வினாவாகவும் பகுதி II அ, ஆ, இ என மூன்று உப பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவை தெரிவு செய்து எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். பல்தேர்வு வினாவுக்கு 40 புள்ளிகளும் ஏனைய மூன்று வினாவுக்கும் 20 புள்ளிகள் வீதம் 60 புள்ளிகள் வழங்கப்படும்.

**சித்திரக்கலை** II

இவ்வினாத்தாளில் ஒரே ஒரு செய்முறை வினா மட்டுமே உள்ளது. சுதந்திரமான இரேகை வரைதலின் மூலம் அசையாப் பொருட்கூட்டத்தைப் பார்த்து வரைதலும் வர்ணம் தீட்டுதலும். இதற்கு 100 புள்ளிகள் வழங்கப்படும்.

Department of Examinations

**சித்திரக்கலை** III

இவ்வினாத்தாள் அ,ஆ,இ என மூன்று செய்முறை வினாக்களை கொண்டது.

அ. சித்திர ஒழுங்கிணைப்பு

ஆ. அலங்கார ஆக்கம்

இ. கிரபிக் சித்திர நிர்மானிப்பு

குறிப்பிட்ட மூன்று பகுதிகளில் இருந்து ஒரு பகுதியை தெரிந்து ஒரு வினாவை தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். இவ்வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகள் வழங்கப்படும். ஒரு வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகள் வீதம் மூன்று வினா பத்திரத்திற்கு 300 புள்ளிகள். இதை மூன்றால் வகுப்பதன் $(300/3 = 100)$ மூலம் இறுதிப் புள்ளியை பெறுதல் வேண்டும்.

முதலாம் வினாப் பத்திரத்திற்கு புள்ளிகள் வழங்கும் போது பகுதி இரண்டிற்கும் வேறுவேறாக புள்ளி வழங்குவதற்கு கவனம் எடுத்தல் வேண்டும். முதலாம் பகுதியான பல்தேர்வு வினா பத்திரத்திற்கு விடை அவ்வினாப்பத்திரத்திலேயே அளிக்கப்பட்டிருக்கும். அப்பத்திரத்திலேயே சரி பிழை இட்டு பெறப்படும் உரிய புள்ளிகளை விடைத்தாளின் மேல் வலப்பக்கத்தில் காணப்படும் கூட்டினுள் பதியவும். மிகுதி வினாக்கள் மூன்றிற்கும் வேறு வேறாக மதிப்பீடு செய்து ஒவ்வொன்றிற்கும் கிடைக்கப் பெறும் புள்ளிகளை பிழை இன்றி அவ்விடையின் இறுதியில் எழுதி அவற்றை கூட்டி அவ்வினாக்களின் கூட்டுத்தொகையை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் வலப்பக்க மேல்மூலையில் காணப்படும் உரிய கூட்டினுள் இட்டு கூட்டிக் கொள்ளவும்.

ஒவ்வொரு விடைகளுக்கும் கிடைக்கும் புள்ளியை வேறு வேறாக வினா இலக்கத்திற்கு எதிரே முன்பக்கத்திற்கு கொண்டு வந்து இட்டு முழுக் கூட்டுத்தொகையை பிழை இன்றி முதலாவது பத்திரத்திற்கு உரிய கூட்டினுள் இடவும். அவ்வாறே ஜஜஇஜஜஜ பத்திரங்களுக்கு நியதிகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட புள்ளிகளை முதல் பக்கத்தில் உள்ள உரிய கூட்டினுள் பதிக. வினாப்பத்திரம் மூன்றிற்கும் 300 புள்ளிகள் பெறப்படும். அதனை மூன்றால் வகுத்து இறுதிப்புள்ளியை தீர்மானித்தல் வேண்டும். இலக்கங்களை எழுதும்போது விளக்கமாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும்.

புள்ளியிடப்பட்ட ஒவ்வொரு விடைத்தாளும் இன்னுமொரு பரீட்சகரினால் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு பரீட்சகரும் தத்தம் குறியீட்டு எண்களை தாம் புள்ளி இட்ட விடைத்தாளிலும் குறித்த இடங்களில் கட்டாயமாக இடவேண்டும்.

புள்ளிப்பட்டியல்களைப் பதியும் போது புள்ளிகளைப் பதியும் பரீட்சகர் தாமே விடைத்தாளை பார்த்து புள்ளிகளைப் பதியவேண்டும். ஒருவர் வாசிக்க ஒருவர் பதியவே கூடாது. பிழைகள் ஏற்படாமல் பொறுமையாக பதிதல் வேண்டும். ஏதேனும் பிழைகள் ஏற்படுமாயின் அதைத் தனிக்கோட்டினால் வெட்டி அருகில் எழுதி கையொப்பம் இட வேண்டும். அழித்தல், சுரண்டுதல், அழிக்கும் மை, பாவித்தல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும்.

சில வேளைகளில் மேலதிகமான வினாக்களுக்கும் விடை அளித்திருக்கக் கூடும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் விடைத்தாளில் எழுதப்பட்டிருக்கும் சகல விடைகளையும் புள்ளியிட்டு முதற்பக்கத்தில் அப்புள்ளிகளைப் பதிந்து அப்புள்ளிகளில் மிகக் குறைந்த புள்ளியை மட்டும் மேலதிகம் எனக் குறிப்பிட்டு வெட்டி மிகுதிப் புள்ளிகளைக் கூட்டி மொத்தப் புள்ளி காணப்பட வேண்டும்.

விடைத்தாள்களைப் புள்ளியிட சிவப்பு மைப் பேனாவைப் பயன்படுத்துக.

Department of Examinations

**பத்திரம் I**

நோக்கம்:- 1. இலங்கை, இந்தியா, ஐரோப்பிய கலை நிர்மானங்களையும் அதன் கலாச்சார பின்னணியையும் பற்றி மாணவர்கள் பெற்றுள்ள தேர்ச்சியை அளவிடல்.

2. பிரசித்தி பெற்ற பல்வேறு கலைஞர்களையும் அவர்களது கலை ஆக்கங்களையும் அறிந்து அவற்றின் பின்னணி, ஊடகப்பயன்பாடு கருப்பொருள் நுட்பமுறைகளையும் உணர்வு வெளிப்பாட்டையும், நயத்தல் திறனையும் அளவிடல்.

3. கற்ற விடயங்களை சரியாகவும், தர்க்கரீதியாகவும் முன்வைக்கும் திறனை அளவிடல்.

**பத்திரம் II**

அசையாப் பொருட்கூட்டம் வரைதலும் வர்ணம் தீட்டுதலும்

நோக்கம்:- 1. இயற்கைச் செயற்கைப் பொருட்களின் இயல்பையும், வடிவமைப்பையும் விளங்கிக் கொள்ளும் திறனையும் கோட்பாடுகளைப் பயன்படுத்தல் தொடர்பான திறன்களையும் நுட்பமுறைப் பயன்பாட்டையும் அளவிடுதல்.

2. இரேகையைப் பயன்படுத்தி பொருட்களின் இயல்புகள் வெளிப்படும் வகையில் சித்தரிக்கும் திறனையும் அளவிடுதல்.

3. வர்ணத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் நுட்பமுறையையும் பொருட்களின் இயல்புகள் வெளிப்படும் முறையில் வர்ணத்தை பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல்.

IIம் பத்திரத்தின் பொருட்டு பரீட்சார்த்தி ஒரு வர்ணச் சித்திரத்தை மாத்திரமே வரைந்திருப்பர். இதில் பொருட்கூட்டத்தை யதார்த்தத் தன்மையில் வரைந்து வர்ணம் தீட்டி பூரணப்படுத்தப்பட்டிருப்பதையே எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்பொருட்டு புள்ளிகளை வழங்கும் பொழுது உரிய நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளைத் தீர்மானிக்க வேண்டும்.

ஒவ்வொரு நியதிகளின் கீழ் பரீட்சார்த்தி எவ்வளவு தூரத்தை அண்மித்துள்ளார் என்பதை பிழையின்றி தீர்மானித்து புள்ளி வழங்குதல் வேண்டும். இங்கு தமது தனிப்பட்ட இரசனைகளுக்கு இடமளிக்காது மதிப்பீடு தொடர்பாக வழங்கப்பட்டுள்ள நியதிகளின் அடிப்படையில் பரீட்சார்த்தி வெளிப்படுத்தியுள்ள திறன்களை விளங்கிக் கொண்டு அதன் அடிப்படையில் மதீப்பீட்டை செய்தல் வேண்டும்.

**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. பொருட் கூட்டத்தை கடதாசிப் பரப்பில் கருத்துடன் ஒழுங்கமைத்துள்ள திறன் (20 புள்ளிகள்)
2. பொருட்களின் பிரமாணப் பண்பையும் அமைப்பையும் இயல்பையும் வெளிப்படுத்தும் திறன். (20 புள்ளிகள்)
3. கோட்பாடுகளை பயன்படுத்திக் கொள்ளும் திறன்.
   (தூரதரிசனம், முப்பரிமாணம், கண்மட்டம்) (20 புள்ளிகள்)
4. வர்ணப் பயன்பாடும், இயல்புகளையும் வெளிப்படுத்திக் காட்டும் திறன். (20 புள்ளிகள்)
5. சித்திரத்தின் பூரணப்பாடு (20 புள்ளிகள்)

II ம் பத்திரத்திற்கு கிடைக்கும் முழுப்புள்ளி - 100 புள்ளிகள்

Department of Examinations

**பத்திரம் III**

"அ" கருத்து வெளிப்பாட்டு சித்திரம்

நோக்கம்:-

இயற்கையில் காணக் கிடைக்கின்ற இயற்கையானதும் செயற்கையானதுமான சூழலையும் பொருட்களின் தன்மையினையும் அவற்றிடையே நிகழ்கின்ற நிகழ்ச்சிகள் செயற்பாடுகள் தொடர்பாக பெற்றுள்ள அனுபவங்களை ஆக்கச் சிறப்புடன் வெளிப்படுத்தும் திறனையும் இரசனை வளர்ச்சியும் மதிப்பிடுதல்.

பரீட்சார்த்திகள் தெரிவு செய்துள்ள தலைப்பை சித்திரிக்கும் பொழுது பல்வேறு மட்டங்களில் திறன்களை வெளிப்படுத்தி இருப்பதை காணலாம்.

இரேகையை கையாண்டு வடிவமைப்புக்களை வெளிப்படுத்தும் பொழுது குறைந்த கூடிய மட்டத்தில் வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தைப் போன்று மனித வடிவங்களை கையாளும் போது அது போன்ற வேறுபாட்டை காணக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம்.

வர்ணத்தை பயன்படுத்தும் பொழுது பல்வேறு நுட்பமுறைகளை பயன்படுத்தி உச்ச மட்ட திறன் வெளிக்காட்டுபவர்களிடையே செயன்முறை திறன் வளர்ச்சி பெறாத பரீட்சார்த்திகளும் வெளிப்படுத்திருக்கும் செயன்முறைத் திறன்களின் மட்டத்தை இனங்கண்டு அதன் பிரகாரம் நியதிகளை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளை வழங்குதல் வேண்டும்.

Department of Examinations

**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. தெரிவு செய்த தலைப்பை சித்திரிக்கும் பொழுது அதற்குப் பொருத்தமான நிகழ்வினையும் சூழலையும் வெளிப்படுத்தியிருக்கும் தன்மை. (20 புள்ளிகள்)

2. மனிதர் பிராணிகளின் உருவங்களுடன் சகல வடிவமைப்புக்களையும் பரப்பில் ஒழுங்கிணைத்துள்ள தன்மை. (20 புள்ளிகள்)

3. கோட்பாட்டுப் பயன்பாடு தொடர்பான விளக்கம். (20 புள்ளிகள்)

4. வர்ணப் பயன்பாட்டில் வெளிப்படுத்தியிருக்கும் திறன். (20 புள்ளிகள்)

5. பூரணப்பாடு (20 புள்ளிகள்)

(முழுப்புள்ளிகள் 100 புள்ளிகள்)

பத்திரம் III (ஆ)

அலங்காரமும் அலங்கரிப்பும் ஆக்கமும்

நோக்கம்:-

அன்றாட வாழ்க்கையில் ஏற்படுகின்ற பல்வேறு தேவைகளுக்கும் தொடர்பாடல் செயல்பாட்டிற்கும் ஏற்ற வகையில் ஆக்கச் சிறப்புடன் திட்டமிட்டலும் அலங்கரித்தல் தொடர்பாகவும் பரீட்சார்த்தி பெற்றுள்ள திறன்களை பரீட்சித்தல்.

பத்திரம் III க்கு விடையளிக்கும் பொழுது

பெரும்பாலான பரீட்சார்த்திகள் பகுதியை தெரிவு செய்கின்றனர். அவர்களிடையே அதிகமானோர் கோட்பாட்டு அறிவுடன் புதிய முறையில் அலங்காரத்தை நிர்மானிப்பதுடன் கோட்பாடு அறிவு இல்லாது அலங்காரத்தை நிர்மானிப்போர் பலர் உள்ளனர். எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளின் ஆக்கங்களில் வெளிப்படுகின்ற அவர்களுடைய அனுபவத் திறன்கள் பலவாகும். நியதிகளின் மூலம் அவர்கள் வெளிக்காட்டியுள்ள திறன்களின் அளவை விளங்கிக் கொண்டு புள்ளிகளை வழங்குதல் வேண்டும்.

Department of Examinations

**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. தலைப்பிற்கு பொருத்தமாக நிர்மானத்தை ஏற்ற வகையில் புதிய முறையில் திட்டமிட்டு கொள்ளும் முறை. (20 புள்ளிகள்)
2. நுகர்வோர் தேவைக்கு பொருத்தமாகவும் கைத்தொழிலுக்கு ஏற்றதாகவும் அமைத்தல். (20 புள்ளிகள்)
3. இரேகை வடிவங்களை கருத்துடன் பயன்படுத்தி கொள்ளும் திறன். (20 புள்ளிகள்)
4. பொருத்தமான வர்ணத்தை தெரிதல் பயன்படுத்திக் கொள்ளும் திறன் (20 புள்ளிகள்)
5. அலங்கரிப்பு அழகும் ஆக்கத்திறன் பூரணப்பாடும் (20 புள்ளிகள்)

முழுப்புள்ளிகள் 100 புள்ளிகள்

**பத்திரம் III (இ) கிரபிக் சித்திர நிர்மானிப்பு**

நோக்கம்:-

வியாபார தேவைகளுக்கும் தொடர்பாடல் செயல்பாட்டிற்கும் ஏற்ற வகையில் ஆக்கச் சிறப்புடன் திட்டமிடலும், அலங்கரித்தல் தொடர்பாகவும் பரிசார்த்தி பெற்றுள்ள திறன்களை பரீட்சித்தல்.

**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. தலைப்பிற்கு பொருத்தமான நிருமானச் செயலுக்கும் உரிய வகையில் புதிய முறையில் திட்டமிட்டுக் கொள்ளும் திறன். (20 புள்ளிகள்)
2. வியாபாரத்திற்கும் தொடர்பாடல் தேவைகளுக்கும் ஏற்ற வகையிலும் கைத்தொழிலுக்கு பொருத்தமாகவும் அமைதல். (20 புள்ளிகள்)
3. இரேகை வடிவங்களை கருத்துடன் பயன்படுத்தி கொள்ளும் திறன். (20 புள்ளிகள்)
4. பொருத்தமான வர்ணத்தை தெரிதலும் பயன்படுத்தி கொள்ளும் திறன். (20 புள்ளிகள்)
5. அலங்கரிப்பு, அழகு, நிருமானத்திறனும் பூரணப்பாடும் (20 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 100 புள்ளிகள்)

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................ ✓ $\frac{4}{5}$

(ii) ............................................................ ✓ $\frac{3}{5}$

(iii) ............................................................ ✓ $\frac{3}{5}$

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

Department of Examinations

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

○○○

Department of Examinations

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்/ Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

චිත්‍ර කලාව I
சித்திரக்கலை I
Art I

51 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

சுட்டெண் : ......................................

* இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.

பகுதி I
- **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடையளிக்குக.
- ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** எதிரே உள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

பகுதி II
- மூன்று உப பகுதிகளைக் கொண்டது.
- **ஒவ்வோர்** உப பகுதியிலிருந்தும் **ஒரு** வினா வீதம் தெரிவுசெய்து, **மூன்று** வினாக்களுக்கு விடை எழுதுக.

* பகுதி I, பகுதி II ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கைளிக்குக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |
| 1ஆம் பரீட்சகர் | 2ஆம் பரீட்சகர் |
| | |

## பகுதி I

● 1 தொடக்கம் 5 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகச் சரியான விடையைத்** தெரிவுசெய்க.

1. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகால குகை ஓவியங்களில் உட்குடைவு (சுரண்டல்) முறையில் வரையப்பட்டுள்ள 'யானையும் குட்டியும்' என்ற ஓவியத்தைக் காணக்கிடைப்பது
   (1) தந்திரிமலை குகையிலாகும். (2) பட்டதொம்ப குகையிலாகும்.
   (3) தொரவக குகையிலாகும். (4) பில்லாவ குகையிலாகும்.
   (5) வெட்டம்புகலை குகையிலாகும். (.........)

2. 'புத்த பகவானுக்கு தபசு, பல்லுக ஆகிய வணிகர்கள் தேனும் தினைமாவும் தானம் கொடுக்கும் ஓவியத்தைக் காணக்கிடைப்பது
   (1) திம்புலாகலை மாறாவீதி குகையிலாகும்.
   (2) மகியங்கனை தூண் ஓவியங்களிலாகும்.
   (3) புள்ளிகொடை குகை ஓவியங்களிலாகும்.
   (4) ஹிந்தகல குகைச் சுவரிலாகும்.
   (5) கொணாகொல்ல சுவரிலாகும். (.........)

3. தியான நிலையிலிருக்கும் பிக்குமாரின் பயன்பாட்டுக்காக நிர்மாணிக்கப்பட்ட விசேட மனை
   (1) ஆசனகர (2) உபோசதகர
   (3) பட்டிமாகர (4) பதானகர
   (5) போதிகர (.........)

Department of Examinations

**4.** பாரதத்தில் 'மௌரியர்' காலத்தில் நிர்மாணிக்கப்பட்டதும் நிர்மாணிப்பில் முழுமைபெற்றதுமான தூண் தலைப்பாகக் கருதப்படுவது

(1) லௌரிய நந்தனகர்
(2) ராம்பூர்வா
(3) சாராணாத்
(4) சாஞ்சி
(5) வைசாலி
(.........)


**5.** ஐரோப்பாவின் வரலாற்றுக்கு முற்பட்டகால குகை ஓவியங்களுள் '17 அடி நீளமான எருதின் உருவத்தைக்' காணக்கிடைக்கும் குகை

(1) பொண்டிதி கோமே
(2) லஸ்கோ
(3) அல்டமீரா
(4) சொவே
(5) கோகுல்
(.........)


● 6 தொடக்கம் **10** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை 1 - 9** வரை இலக்கமிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.


1



2



3



4


5


6


7


8


9

Department of Examinations

**6.** கடோல்கல்ல பரம்பரை ஓவியர்களால் வரையப்பட்ட ஓவியம் எது?

(1) **4** (2) **5** (3) **6** (4) **8** (5) **9** (.........)

**7.** புத்த ஜாதகக்கதைகளின் தொனிப்பொருள் **அல்லாத** ஓவியங்கள் யாவை?

(1) **4,5** (2) **5,6** (3) **6,7** (4) **7,8** (5) **7,9** (.........)

**8.** மெதவலை விகாரையிலிருந்து எடுக்கப்பட்டுள்ள ஓவியங்கள் யாவை?

(1) **1,3** (2) **2,3** (3) **3,4** (4) **4,5** (5) **5,6** (.........)

**9.** இவற்றுள் குகை விகாரைகளுடன் தொடர்புடையனவாகக் கருதப்படும் ஓவியங்கள் யாவை?

(1) **1,2,5** (2) **2,3,5** (3) **2,5,7** (4) **4,5,7** (5) **5,6,7** (.........)


**10.** கண்டி மரபிற்குரிய மலைநாட்டுப் பாணியைச் சித்திரிக்கும் ஓவியங்கள் யாவை?

(1) **1,2,3,7** (2) **2,3,4,7** (3) **3,4,5,6** (4) **4,5,6,9** (5) **5,6,7,8** (.........)

● **11** தொடக்கம் **15** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை A, B, C, D, E** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.



**A**




**B**



**C**



**D**



**E**

**11. A** எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது

(1) சிறுவர்களின் கதைப்புத்தகமொன்றுக்காக வரையப்பட்ட கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமாகும்.
(2) பத்திக் கைத்தொழிலுக்காக மஞ்சுஸ்ரீயினால் மேற்கொள்ளப்பட்ட அலங்காரமாகும்.
(3) சுமண திசாநாயக்காவினால் நிர்மாணிக்கப்பட்ட பத்திக் அலங்காரமாகும்.
(4) ஐவன் பீரிஸ்சினால் பத்திக் முறைக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுவர் அலங்காரமாகும்.
(5) வெளிநாட்டவர்களுக்காக பத்திக் ஊடகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுவர் அலங்காரமாகும். (.........)

**12. B** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஜோர்ஜ் கீற்றின் ஓவியம்

(1) பெண்ணொருவர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சுயநிர்மாணிப்பாகும்.
(2) இந்து சமய இலக்கியத்தில் வரும் 'தலைவி' எனும் தொனிப்பொருளை வெளிப்படுத்தும் நிர்மாணிப்பாகும்.
(3) கீதகோவிந்தத்தில் வரும் பாத்திரமொன்று சித்திரிக்கப்படுதலாகும்.
(4) கற்பனையான பாத்திரமொன்றைப் பற்றிய சித்திரிப்பாகும்.
(5) பெண்களின் வனப்பைச் சித்திரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகும். (.........)

**13. C** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள றிச்சர்ட் கேப்பிரியலின் ஓவியமானது

(1) சமயப் பணியொன்றுக்காகச் செல்லும் பெண்களைப் பற்றியதொரு விபரிப்பாகும்.
(2) வடிவங்களும் வர்ணங்களும் சித்திரிப்புப் பாணியிலும் குறியீட்டுப் பாணியிலும் பயன்படுத்தப்பட்டுள்ளமையாகும்.
(3) முழுப் பரப்பிலும் சிறந்த வர்ண பொருத்தப்பாட்டைப் பேணியுள்ளதொரு படைப்பாகும்.
(4) பெண்களின் இரண்டு குழுக்களுக்கிடையிலான செய்தியொன்று சித்திரிக்கப்படுவதாகும்.
(5) யதார்த்தபூர்வமான தன்மை கலைப்பாங்குடன் சித்திரிக்கப்பட்டுள்ளமையாகும். (.........)

**14. D** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியத்தை வரைந்தவர் யார்?

(1) அபனீந்திரநாத் தாகூர்          (2) ரவீந்திரநாத் தாகூர்
(3) ஜெமினி ரோய்          (4) நந்தலால் போஸ்
(5) அம்ரிதா ஷேர்கில் (.........)


**15. E** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியம்

(1) வேகமான தூரிகைத் தடங்களைப் பயன்படுத்தி வர்ணப் பலத்தை வெளிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டதொரு முயற்சியாகும்.
(2) நட்சத்திரங்கள் நிறைந்த இரவொன்றில் குளிர்ச்சியான சூழலில் ஏற்படும் வனப்பை பாவரீதியாக வெளிப்படுத்துதலாகும்.
(3) கலைஞரொருவரின் அதிவேகமானதொரு உணர்வை வர்ணங்களினூடாக வெளிப்படுத்துதலாகும்.
(4) இயற்கையின் வனப்பைக் காட்டுவதற்காக இரவுச் சூழலைப் பயன்படுத்திக் கொண்டதொரு சந்தர்ப்பமாகும்.
(5) காரிருளுக்கும் வெளிச்சத்துக்கும் இடையிலான தொடர்பு பற்றி மேற்கொள்ளப்பட்ட கட்புல வெளிப்பாடாகும். (.........)

Department of Examinations

- **16** தொடக்கம் **20** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை F, G, H, I, J** எனப் பெயரிடப்பட்டுள்ள செதுக்கல்களைக் கொண்ட பின்வரும் படங்களிலிருந்து தெரிவுசெய்க.


F


G


H


I


J

**16.** F எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இசுருமுனிய செதுக்கல்

(1) யானைகளின் எளிய உருவங்கள் செதுக்கப்பட்டுள்ள அரியதோர் நிர்மாணிப்பாகும்.
(2) நீர் விளையாட்டொன்றுக்குத் தயாராகும் யானைகளைச் சித்திரிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சியாகும்.
(3) அதிக ஆர்வத்துடன் யானைகளின் அசைவுநிலைகள் யதார்த்தபூர்வமாக சித்திரிக்கப்பட்டுள்ளமையாகும்.
(4) நிலையான பாறையின் பண்பைப் பயன்படுத்தி யானைகளின் மெய்நிலை அசைவுகள் சித்திரிக்கப்பட்டுள்ளமையாகும்.
(5) யானைகளின் அசைவற்ற நிலைகளை யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டதொரு முயற்சியாகும். (.........)

**17.** G எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சந்திரவட்டக்கல்

(1) எண்ணக்கருரீதியாகச் செதுக்கப்பட்ட மென்புடைப்புடைய பலகைச் செதுக்கலாகும்.
(2) படிக்கட்டொன்றின் அடிப்பகுதியில் இடப்பட்டுள்ள செதுக்கல் செய்யப்பட்ட பலகையாகும்.
(3) பொலன்னறுவைக் கலைஞரின் பேராற்றலின் மகிமையை எடுத்துக்காட்டும் செதுக்கலாகும்.
(4) அனுராதபுர செதுக்கல் கலைஞரின் திறனைச் சித்திரிக்கும் நிர்மாணிப்பாகும்.
(5) பௌத்த சமயத்தில் குறிப்பிடப்படும் 'மறுபிறவி' பற்றிச் சித்திரிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சியாகும். (.........)

**18.** H எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இந்திய பாருத் செதுக்கலினால்

(1) ஜேதவனப் பிரதேசம் புத்தபகவானுக்கு கையளிக்கப்பட்டமை சித்திரிக்கப்பட்டுள்ளது.
(2) புத்தபகவானுக்குப் பதிலாக அரச மரம் பயன்படுத்தப்பட்டதொரு சந்தர்ப்பம் காட்டப்பட்டுள்ளது.
(3) பாருத் கலைஞரின், சம்பவங்களைச் சித்திரிக்கும் ஆற்றல் விளக்கப்பட்டுள்ளது.
(4) அனேபிண்டு சித்தர், புத்தபகவானைச் சந்தித்தமை சித்திரிக்கப்பட்டுள்ளது.
(5) ஜேதவனராமயவுக்கு புத்தபகவான் வருகை தந்திருந்த சந்தர்ப்பம் சித்திரிக்கப்பட்டுள்ளது. (.........)

**19.** I எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிந்துவெளி முத்திரையினால் சித்திரிக்கப்படுபவர்


(1) கொம்புகளைக் கொண்ட கிரீடம் அணிந்த கடவுளாவார்.
(2) வனத்திற்கும் பிராணிகளுக்கும் அதிபதியான கடவுளாவார்.
(3) யோகாசன நிலையிலுள்ள யோகியாவார்.
(4) கொம்புகளைக் கொண்ட கிரீடம் அணிந்த பசுபதியாவார்.
(5) திரிசூலமொன்றைக் கொண்ட கிரீடம் அணிந்த பூசகராவார். (.........)

**20.** J எழுத்தினால் காட்டப்பட்டுள்ள தூண் செதுக்கல்

(1) மிக அலங்காரமானதாகச் செதுக்கப்பட்ட கொறிந்தியன் தூணாகும்.
(2) கொரிந்த் நகரில் பரவலாகக் காணக்கிடைக்கும் ஒரு வகைத் தூணாகும்.
(3) அதீனா தேவாலயத்தில் காணக்கிடைக்கும் தூண் வகையின் தலையாகும்.
(4) கிரேக்கத்தின் மிகப் பழமையான தூணான டொறிக் தூணாகும்.
(5) கிரேக்கத்தில் பரவலாகக் காணக்கிடைக்கும் அயோணிக் தூணாகும். (.........)

Department of Examinations

● **21** தொடக்கம் **25** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை K, L, M, N, O** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் கலைப் படைப்புகளிலிருந்து தெரிவுசெய்க.


K

L

M

N

O

**21.** **K** எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது
(1) மரத்தினால் செய்யப்பட்ட சிலையாகும்.
(2) இயற்கையான மனித உரு எளிமைப்படுத்தப்பட்டுள்ளமையாகும்.
(3) உலோக ஊடகத்தினால் வார்ப்புச் செய்யப்பட்டுள்ளமையாகும்.
(4) கற்பனையொன்று சிலையாக்கப்பட்டுள்ளமையாகும்.
(5) தட்டி அடிப்பதன் மூலம் தயாரிக்கப்பட்ட உலோகத்திலான சிலையாகும். (.........)

**22.** **L** எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது
(1) பக்தர்களை மாயையிலிருந்து விடுவிக்கும் கருத்தைச் சித்திரிக்கும் சிலையாகும்.
(2) உடலியல் நிலைகளின் மூலம் பல்வேறு முத்திரைகளை வெளிப்படுத்தும் சிலையாகும்.
(3) இடைவெளிப்பயன்பாடு, அசைவு நிலைகள் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பு பற்றிய கருத்துள்ள வெளிப்பாடாகும்.
(4) உலக இயக்கம் பற்றி குறியீட்டுப்பாங்கில் வரையறையொன்றை முன்வைக்கும் சிலையாகும்.
(5) நடனத்தில் பயன்படுத்தப்படும் நடனநிலைகளின் ஊடாகச் செய்யப்பட்டுள்ள கருத்துள்ள வெளிப்பாடாகும். (.........)

**23.** **M** எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது
(1) சயனநிலையைச் சித்திரிக்கும் விதத்தில் நிலையான பாறையில் செதுக்கப்பட்ட சிலையாகும்.
(2) பொலன்னறுவை ஆலாகன பிரிவெனா கட்டடத்தொகுதிக்குரிய சயனநிலைச் சிலையாகும்.
(3) பல்லவர்களின் கலைப் பண்புகள் சித்திரிக்கப்படுவதாகக் கருதப்படும் சிலையாகும்.
(4) பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட பொலன்னறுவை கல்விகாரைத் தொகுதிக்குரிய சயனநிலைச் சிலையாகும்.
(5) அதியுன்னத சிலைப் பண்புகளைச் சித்திரிக்கும், கல்லினால் செதுக்கப்பட்ட பொலன்னறுவைக் காலத்துக்குரிய சிலையாகும். (.........)

**24.** **N** எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது
(1) கடினச் செயலை விழுமியரீதியாகவும் பௌதிகரீதியாகவும் எடுத்துக்காட்டும் படைப்பாகும்.
(2) போதிசத்துவரின் கடினச் செயலை யதார்த்தபூர்வமாகச் சித்திரிப்பதற்கு காந்தாரக் கலைஞர் மேற்கொண்டதொரு முயற்சியாகும்.
(3) காந்தாரக் கலைஞரின் ஊடகப் பயன்பாட்டையும் கலைத்திறனையும் வெளிப்படுத்தும் சிறந்த உதாரணமாகும்.
(4) பௌத்த இலக்கியத்தில் விவரிக்கப்படும் கடினச் செயல் யதார்த்தபூர்வமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளமையாகும்.
(5) போதிசத்துவரின் மெலிந்த உடலின் தன்மையை கல்லினாலான ஊடகத்தில் சித்திரிக்கும் சிலையாகும். (.........)

**25.** **O** எழுத்தினால் வெளிப்படுத்தப்படுவது
(1) கிரேக்க செந்நெறிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட உன்னதமானதொரு படைப்பாகும்.
(2) மறுமலர்ச்சிக் காலத்தில் உருவான அதியுன்னத வெண்பளிங்குச் சிலையாகும்.
(3) கம்பீரமான நபரொருவரைச் சித்திரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட உயர்மட்ட முயற்சியாகும்.
(4) ஹெலனிஸ்டிக் காலத்தில் வாழ்ந்த சிறந்த சிற்பக் கலைஞர் ஒருவரின் சிலையாகும்.
(5) பாப்பரசர் ஜீலியசின் புதைகுழியிலுள்ள பிரதான சிலையாகும். (.........)

● **26** தொடக்கம் **30** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவுசெய்க.

**26.** ஐரோப்பாவில் பின் மனப்பதிவுவாதம் ஆரம்பிப்பதற்கு ஏதுவான முக்கிய காரணம் யாது?
(1) பொருட்களை விட உணர்வு வெளிப்பாடு முக்கியமானதாகக் கருதப்பட்டமையாகும்.
(2) ஒளியும் இருளும் முப்பரிமாண இயல்புகளைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டமையாகும்.
(3) யதார்த்தபூர்வ வெளிப்பாட்டு மரபானது, ஓவியக்கலையின் முன்னேற்றத்துக்குத் தடையாகக் கருதப்பட்டமையாகும்.
(4) மனப்பதிவுவாதத்தில் காணப்பட்ட வரையறைகளைக் கடந்து புதிய வழிமுறைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டமையாகும்.
(5) இயற்கைச் சித்திரிப்பைவிட கற்பனைகளின் மீது கலைஞர்களின் ஈடுபாடு அதிகரித்தமையாகும். (.........)

Department of Examinations

**27.** வெற்றிகரமான புத்தக மேலட்டை நிர்மாணிப்பில் மிக முக்கியமானதாய் அமைவது
(1) உள்ளடக்கத்துக்குப் பொருத்தமான விதத்தில் வர்ணங்கள், வடிவங்களின் பயன்பாடும் திட்டமிடலுமாகும்.
(2) தலைப்பிற்குப் பொருத்தமான ஆக்கபூர்வமான எழுத்துக்களைப் பயன்படுத்துதலாகும்.
(3) பல்வேறு தொழில்நுட்ப முறையியல்களைப் பொருத்தமான விதத்தில் பயன்படுத்துதலாகும்.
(4) பொருத்தமான ஓவியங்களையும் உருவங்களையும் கவர்ச்சிகரமாக நிர்மாணித்தலாகும்.
(5) அச்சிடல் தொழில்நுட்பத்துக்கு ஏற்றவாறு வர்ணங்களைப் பயன்படுத்தத்தக்க விதத்தில் நிர்மாணித்தலாகும். (.........)

**28.** 'ஓவியப்பாங்கான ஒழுங்கமைப்பு' எனப்படுவது
(1) உளரீதியான எண்ணக்கருவொன்றை எடுத்துக்காட்டும் வர்ணமயமான வெளிப்பாடாகும்.
(2) கற்பனையொன்றை அல்லது அனுபவமொன்றை அடிப்படையாகக் கொண்ட கட்புல வெளிப்பாடாகும்.
(3) வர்ணங்கள், கோடுகள், வடிவங்கள் ஆகிய ஊடகங்களினால் செய்யப்படும் இயற்கையான வெளிப்பாடாகும்.
(4) அலங்கார வடிவங்கள், பிரகாசமான வர்ணங்கள் ஆகியவற்றைக் கொண்ட வெளிப்பாடாகும்.
(5) ஏதேனுமொரு தலைப்பை ரசனைக்குரியதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் வெளிப்படுத்துதலாகும். (.........)

**29.** அச்சிடலுக்காக பரவல் அலங்காரமொன்றை நிர்மாணிக்கும்போது மிக முக்கியமானதாய் அமைவது
(1) எளிய வடிவங்களையும் வரையறுக்கப்பட்ட வர்ணங்களையும் பயன்படுத்துதலாகும்.
(2) நிர்மாணிக்கப்பட்ட அலங்காரப் பகுதியை, ஏனைய பகுதிகளுடன் சகல பக்கங்களிலும் தொடர்புபடுத்துதலாகும்.
(3) ஆக்கபூர்வமான வடிவங்களின் பயன்பாடும் மனங்கவர் வர்ணங்களைப் பயன்படுத்துதலுமாகும்.
(4) சதுரக்கோலமொன்றின் மீது அமைத்து சமவளவான பல்வேறு அலகுகளினால் முழுப் பரப்பையும் நிரப்பும் விதத்தில் வரைதலாகும்.
(5) பயன்படுத்திய வடிவங்களில் குளிர், வெப்ப வர்ணங்களைப் பொருத்தமானவாறு பயன்படுத்துதலாகும். (.........)

**30.** அசையாப் பொருள்கூட்ட வரைதலின்போது எதிர்பார்க்கப்படுவது
(1) அடிப்படைக் கோட்பாடுகளுக்கமைய பொருள்கூட்டத்தைத் தம் விருப்பப்படி வரைந்து, வர்ணமிட்டு பூரணப்படுத்துதலாகும்.
(2) அடிப்படைக் கோட்பாடுகளைப் பயன்படுத்தி, இயல்புகள் வெளிப்படும் விதத்தில் வரைந்து, வர்ணமிடுதலாகும்.
(3) பொருள்கூட்டத்திலுள்ள பொருள்களை முப்பரிமாண இயல்புகள் வெளிப்படும் விதத்தில் வரைந்து வர்ணமிடலாகும்.
(4) பொருள்கூட்டத்தில் உள்ளடங்கியுள்ள பொருள்களைச் சரியாக வரைந்து வர்ணமிடலாகும்.
(5) ஒவ்வொரு பொருளையும் தனித்தனியாக வரைந்து, அவற்றின் இயல்புகளுக்கேற்ப வர்ணமிடலாகும். (.........)

● **31** தொடக்கம் **35** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை** அதற்கு முன்னாலுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்புகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்க.

**31.** இங்கு காட்டப்பட்டுள்ள கட்டடம்



(1) மிகப்பெரிய கற்பாறையொன்றின் மீது கட்டப்பட்டுள்ளதொரு விகாரையாகும்.
(2) புவனேகபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் கணேஸ்வராச்சாரியாரினால் நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(3) தென்னிந்திய கட்டடக்கலைப் பண்புகளுக்கமைய நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(4) பௌத்த, இந்து சமய நிலையமாக நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(5) கம்பளைக் காலத்தில் ஸ்தபதிராயர் என்ற கலைஞரால் நிர்மாணிக்கப்பட்டதாகும். (.........)

**32.** இங்கு காட்டப்பட்டுள்ள கட்டடக்கலைப் படைப்பு



(1) அனுராதபுரக் காலத்திற்குரிய அரச பரம்பரையினருக்காக அமைக்கப்பட்ட, கற்களினாலான நீர்த் தடாகமாகும்.
(2) அனுராதபுரக் காலத்திற்குரிய கற்களினாலான தடாகங்களுள் மிகச் சிறந்த நிர்மாணிப்பாகும்.
(3) நீர்வளத் தொழில்நுட்பத் தேர்ச்சியை எடுத்துக்காட்டும் பெறுமதிமிக்க, கற்களினாலான நிர்மாணிப்பாகும்.
(4) அபயகிரி விகாரைப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட கற்களினாலான சோடித் தடாகமாகும்.
(5) சிறப்பாக மினுக்கல் செய்யப்பட்ட, கற்பலகைகளினால் நிர்மாணிக்கப்பட்டதாகும். (.........)

Department of Examinations

**33.** இங்கு காட்டப்பட்டுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்பு



(1) இராஜராஜ சோழன் தன் மனைவிக்காக நிர்மாணித்த இரண்டாம் சிவாலயமாகும்.
(2) வெட்டித் தயாரிக்கப்பட்ட கற்றகடுகளைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட சிவாலயமாகும்.
(3) பொலன்னறுவையில் அமைந்துள்ள சிவன் கோயிலாகும்.
(4) தென்னிந்தியர்கள் தமது பூஜை வழிபாடுகளுக்காக நிர்மாணித்த கோயிலாகும்.
(5) தென்னிந்திய சோழர்களின் கட்டடக் கலைப் பண்புகளைச் சித்திரிக்கும் முதலாம் சிவாலயமாகும். (.........)


**34.** இங்கு காட்டப்பட்டுள்ள எல்லோராவிலுள்ள கோயில்,



(1) மலைகளை வெட்டி நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(2) மலைகளைக் குடைந்து நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(3) நிலத்தில் நிர்மாணிக்கப்பட்ட கோயிலாகும்.
(4) வெட்டித் தயாரிக்கப்பட்ட கற்களைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(5) மலையின் மீது நிர்மாணிக்கப்பட்டதாகும்.

(.........)

**35.** இங்கு காட்டப்பட்டுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்பு மேற்கொள்ளப்பட்டது



(1) இறந்த அரசர்களின் நினைவுச் சின்னங்களாகவாகும்.
(2) பாரா மன்னர்களின் பராக்கிரமத்தை வெளிப்படுத்துவதற்காகவாகும்.
(3) இறந்த பாரா மன்னர்களுக்கான பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதற்காகும்.
(4) ஆன்மாக்களைப் பாதுகாப்பதற்காக இறந்த உடல்களைப் புதைப்பதற்காகவாகும்.
(5) அரச குடும்பத்தின் இறந்த உடல்களைப் பாதுகாப்பாக வைப்பதற்காகவாகும். (.........)

● பின்வரும் கலைப்படைப்பைப் பயன்படுத்தி **36** தொடக்கம் **40** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவுசெய்க.



**36.** இந்த ஓவியத்தை வரைந்த கலைஞர் யார்?
(1) போல் க்ளீ
(2) பப்லோ பிக்காசோ
(3) ஜக்சன் பொலொக்
(4) வசிலி கென்தினெஸ்கி
(5) சல்வடோர் டாலி (.........)

Department of Examinations

37. இந்த ஓவியத்தின் கருப்பொருள் யாது?
(1) யுத்தத்தின் கொடூரத் தன்மையை வெளிப்படுத்துதல்
(2) பாசிசவாதிகளின் கொடூரத்தை எதிர்த்தல்
(3) ஸ்பானிய நகரமொன்றில் குண்டுகள் பொழியப்பட்டமையால் ஏற்பட்ட அழிவு
(4) யுத்தத்தின் கொடூரத் தன்மை பற்றி கலைஞரின் மனதில் பதிந்துள்ள சிந்தனைகளின் தொகுப்பு
(5) யுத்தத்தின் கொடூர விளைவுகளைச் சந்தித்த மக்கள் சமூகத்தின் சோக வெளிப்பாடு (.........)

38. இந்த ஓவியத்தின் ஒழுங்கமைப்பு முறையானது
(1) இயற்கையான வடிவங்கள் கற்பனைக் கோலமொன்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ளமையாகும்.
(2) மனித, பிராணிகளின் உருவங்கள் கனவடிவவாத கலைநுட்பத்துக்கமைய சித்திரிக்கப்பட்டுள்ளமையாகும்.
(3) கற்பனையான வடிவங்களைப் பயன்படுத்தி தொடர்ச்சியாகப் பேசும் பாணியில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமையாகும்.
(4) குறித்த கருப்பொருள் பல சந்தர்ப்பங்களாகப் பிரித்து வரையப்பட்டுள்ளமையாகும்.
(5) பொருட்களைச் சித்திரிப்பதை விட உணர்வு வெளிப்பாட்டுக்கு முதலிடம் வழங்கப்பட்டுள்ளமையாகும். (.........)

39. இந்த ஓவியத்தின் வெளிப்பாட்டுக் கூறுகளின் பயன்பாட்டின்போது
(1) 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட நவீன கலை எண்ணக்கரு அடிப்படையாய் அமைந்துள்ளது.
(2) யதார்த்தத்தை பல்வேறு கோணங்களில் வெளிப்படுத்தும் நியதிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.
(3) யதார்த்தபூர்வமான சாஸ்திரீய விதிகள் கனவடிவவாத எண்ணக்கருவுடன் கலந்துள்ளன.
(4) பிற்பட்ட மனப்பதிவுவாதிகளின் ஓவியங்களை வரையும் எண்ணக்கருக்கள் தாக்கம் செலுத்தியுள்ளன.
(5) சிக்கலான கேத்திரகணித வடிவங்கள் வெளிப்பாட்டின் பிரபல்யத்தில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. (.........)

40. இவ்வோவியத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுவது
(1) யுத்தத்தின் கொடூரத்துக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட கட்புலனான விவரிப்பாகும்.
(2) யுத்தத்தின் தாக்குதல்களினால் மக்கள் துன்புற்றுள்ள தன்மையாகும்.
(3) அழிவுற்ற ஒரு நகரம் தொடர்பான தகவல்களை உணர்வுபூர்வமாக விவரித்தலாகும்.
(4) மனிதர்களின் துன்பமும் அலறலும் பற்றிய விவரிப்பாகும்.
(5) பலசாலிக்கும் பலவீனமானவனுக்கும் இடையில் நடைபெறும் சமூக அநீதியை விவரித்தலாகும். (.........)

**

Department of Examinations

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2020

### පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்

විෂය අංකය / பாட இலக்கம் **51**     විෂයය / பாடம் **சித்திரம்**

### ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 3 | 21. | 3 | 31. | 5 |
| 02. | 4 | 12. | 2 | 22. | 3 | 32. | 4 |
| 03. | 4 | 13. | 4 | 23. | 4 | 33. | 1 |
| 04. | 3 | 14. | 4 | 24. | 2 | 34. | 1 |
| 05. | 2 | 15. | 2 | 25. | 5 | 35. | 4 |
| 06. | 3 | 16. | 4 | 26. | 4 | 36. | 2 |
| 07. | 3 | 17. | 3 | 27. | 1 | 37. | 3 |
| 08. | 1 | 18. | 1 | 28. | 2 | 38. | 2 |
| 09. | 3 | 19. | 4 | 29. | 2 | 39. | 5 |
| 10. | 1 | 20. | 1 | 30. | 2 | 40. | 1 |

Department of Examinations

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 40 = 40

1. யாப்பகூவ, கம்பளைக் காலப்பகுதிகளில் விசேட கட்டடக்கலைப் பண்புகளைக் கொண்ட கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

(i) யாப்பகூவவில் காணத்தக்க கட்டடக்கலை நிர்மாணிப்புகள் **இரண்டினதும்** பெயர்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

- அரச மாளிகை
- தலதா மாளிகை

(ii) யாப்பகூவவில் காணத்தக்க கற்பலகைச் செதுக்கல்கள் பற்றிச் சுருக்கமாக விவரிக்குக.(6 புள்ளிகள்)

- கருங்கல்லை ஊடகமாகக் கொண்டு கற்பலகைச் செதுக்கல்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- காற்றுத் துளைகளின் மேல் இச் செதுக்கல் காட்டப்பட்டுள்ளது.
- காற்றுத் துளைகளுக்கு மேல் கிபிகி முகத்துடனான மகரதோரணம் காட்டப்பட்டுள்ளது.
- மகர தோரணத்தின் மத்தியில் கஜலக்ஸ்மி யின் உருவம் காணப்படுகிறது. அமர்ந்த நிலையில் இருக்கும் லக்ஸ்மியின் உருவத்தின் இரு புறத்தில் தும்பிக்கைகளை உயர்த்தியபடி யானை உருவங்கள் லக்ஸ்மிக்கு நீர் விசிறப்படுவது போல் செதுக்கப்பட்டுள்ளது.

(iii) கடலாதெனிய ரஜமகா விகாரையின் கட்டடக்கலை நிர்மாணக் கூறுகள் பற்றி ஆராய்க. (10 புள்ளிகள்)

- தென் இந்திய கலைஞர் கணேஸ்வராச்சாரியாரால் கட்டப்பட்டது.
- கம்பளை காலத்துக்குரியது
- 4 ஆம் புவனேபாகு மன்னனால் கிபி 1344 ல் ஆண்டில் கட்டப்பட்டது.
- கருங்கல்லை ஊடகமாகக் கொண்டு குன்றின் மீது கட்டப்பட்டது.
- சிகர அமைப்பைக் கொண்ட கூரை காணப்படுகிறது.
- கெடிகே முறைப்படி கட்டப்பட்டுள்ளது.
- வாயில் மண்டபம், இடை மண்டபம், கர்ப்பக்கிரகம் மூன்று பகுதிகளைக் காணக்கூடியதாக உள்ளது.
- கர்ப்பக்கிரகத்தில் பிரதான புத்தர் சிலையுடன் 4 சிறிய நின்ற நிலை புத்தர் சிலைகள் காணப்படுகிறது.
- வெளிச்சுவரில் கற்சிற்பங்களும், செதுக்கல்களும் காட்டப்பட்டுள்ளது.
- நுழை மண்டபத்தின் அடித்தளத்தில் பல நிலை கொண்ட நடனமாடும் பெண்களும், இசைக்கலைஞர்களும் செதுக்கல்கள் அரைப்புடைப்பு நுட்பமுறையில் செதுக்கப்பட்டுள்ளது.
- நுழைவாயிலின் இரு புறத்தில் கஜசிங்க உருவங்கள் காட்டப்பட்டுள்ளது.
- நுழை மண்டபத்தின் தூண்கள் 8 மூளைகளைக் கொண்டதும் 4 முகங்களைக் கொண்டதுமாக அமைக்கப்பட்டுள்ளது.
- இவ்வாறு மூன்று பகுதிகளுடன் இணைக்கப்பட்ட கற்த்தூண்கள் இந்தியாவில் விஜயநகர மரபில் அமைக்கப்பட்டுள்ளது.
- சிலைமனையை அண்மித்து விஜேயஹற்பாய எனும் அமைப்பு முன்னால் அமைக்கப்பட்டுள்ளது.
- விஜயோத்பாய கட்டிடப் பகுதியை சுற்றி 4 பக்கமும் 4 புத்தர் சிலைமனைகள் சிறியளவில் அமைக்கப்பட்டுள்ளது.
- பாரிய அளவிலான தூபிக்கு மேலாக 4 தூண்கள் மீது அமைக்கப்பட்ட கூரையொன்று காணப்படுகிறது.

Department of Examinations

**2.** பொலன்னறுவையில் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலத்தில் உருவான கலைப்படைப்புக்களில் சுவர் ஓவியக்கலைக்கும் கட்டடக்கலை நிர்மாணிப்புகளுக்கும் தனித்துவமானதொரு இடம் உரித்தாகிறது.

(i) கல்விகாரையில் தற்போது எஞ்சியுள்ள ஓவியப்பகுதியில் காணத்தக்க கதாப்பாத்திரங்கள் **இரண்டையும்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

- பிராமணர் உருவம் (கையில் மலருடன் நீண்ட தாடியுடன்)
- தெய்வ or தேவர் உருவம் (மகுடத்துடன் ஒளி வட்டத்துடன்)

(ii) "திவங்க சிலைமனையினுள் இரண்டு காலப்பகுதிகளுக்குரிய ஓவியங்களைக் காணத்தக்கதாயுள்ளது." ஒப்பீட்டுரீதியாகப் பகுப்பாய்க. (6 புள்ளிகள்)

- திவங்க சிலைமனையானது கிபி 12 ஆம் நூற்றாண்டில் 1 ஆம் பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் கட்டப்பட்டது.
- நுழை மண்டபம், இடை மண்டபம், கர்ப்பக்கிரகத்தின் சுவர்களிலும் கூரையிலும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.
- இவ் ஓவியங்கள் கண்டிய பாணியிலும், பொலன்னறுவைக் கால பாணியிலும் வரையப்பட்டுள்ளன.

**பொலன்னறுவைக்காலம்**
- தேவாராதனை
- புத்தர் சங்கிஸ்ரபுரத்துக்கு ஏணியில் இறங்கும் காட்சி
- கருத்து வேறுபாட்டுக்கு முக்கியத்தும் அளித்து கோட்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படவில்லை.
- வெப்ப வர்ணத் தொகுதி பயன்படுத்தப்பட்டுள்ளது.
- முப்பரிமாணம் ஒளிநிழல் காட்ட முயற்சிக்கப்பட்டுள்ளது.

**பொலன்னறுவை மற்றும் கண்டிகால ஓவியங்கள்**
- ஜாதகக் கதைகள்
- இருபரிமாண முறையில் வரையப்பட்டுள்ளது.
- சமாந்தர கோடுகளுக்கிடையில் உருவங்கள் ஒரே தளத்தில் வரையப்பட்டுள்ளது.
- கதை கூறும் விதத்தில் தொடர்ச்சியாக வரையப்பட்டுள்ளது.
- பின்னணி சிவப்புடன் உருவங்களில் முப்பரிமாணத் தன்மையும் காட்டி வரையப்பட்டுள்ளது.

(iii) பொலன்னறுவை காலத்திற்குரிய தூபாராம அக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட விசேட கட்டடக்கலை நிர்மாணிப்பாகும். ஆராய்க. (10 புள்ளிகள்)

- பொலன்னறுவைக்கால தூபராம சிலைமனை அநுராதபுர கால சிலைமனைகளிலிருந்து வேறுபட்டு காணப்படுகிறது.
- பொலன்னறுவை தூபராம செங்கல்லை ஊடகமாகக் கொண்டு கெடிகே மரபைத் தழுவி அமைக்கப்பட்டுள்ளது.
- இதன் கட்டிடங்கள் செங்கல்லாலும், சுண்ணாம்பு சாந்தினாலும் காணப்படுகிறது.
- தூபராம சிலைமனையின் கூரை மிகவும் பாதுகாப்பாக காணப்படுகிறது இது பொலன்னறுவையில் ஏனைய சிலை மனைகளை விட சிறியதாகும்.
- தென் இந்திய கட்டிட நிர்மாணிப்புப் பண்புகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.
- இதன் கூரை வில் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.
- பராக்கிரமபாகு மன்னனால் கட்டப்பட்டது.
- இதன் கர்ப்பக்கிரகத்தில் அமர்ந்த நிலை புத்தர் சிலை காணப்படுகிறது.

Department of Examinations

- தூபராம சிலைமனையைச் சுற்றி சிம்ம உருவங்கள், அழகிய விமானங்கள், அதனுள் இருக்கும் தெய்வ உருவங்கள் செங்கல்லினாலும், சுண்ணாம்பினாலும் அமைக்கப்பட்டுள்ளன.

**3.** ஆந்திரா பிரதேசத்தில் காணப்பட்ட பௌத்த கலை நிலையங்கள் இரண்டுடன் தொடர்புடைய விதத்தில் பல கலை நிர்மாணிப்புகள் பாரதத்துக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன.

(i) நாகர்ஜுன கொண்டவிலிருந்து கிடைக்கப்பெற்ற **இரண்டு** செதுக்கல்களின் பெயர்களைக் குறிப்பிடுக (4 புள்ளிகள்)

- மார யுத்தம்
- சித்தார்த்தரின் பிறப்பு
- தேவர்கள் அழைப்பு
- நந்தகுமார் தேவலோகம் செல்லல்
- புத்தரின் பரிநிர்வாணம்
- புத்தர் சங்கிஸ்ஸபுர வருகை

(ii) 'சைத்தியத் தகட்டுச்' செதுக்கல்களிலிருந்து வெளிப்படும் அமராவதி சைத்தியம் பற்றிய தகவல்களைச் சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

- அமராவதி சைத்தியம் ஆந்திர பிரதேசத்தில் அமைந்த முக்கியமான பௌத்த கலாச்சார மத்திய நிலையமாகும்.
- பெறுமதி வாய்ந்த கலைப்படைப்புக்களை கொண்ட இடமாகும்.
- சாஞ்சி தூபியின் வடிவத்துக்கு சமமான வடிவத்தைக் கொண்டது.
- இத்தூபியைச் சுற்றி கல்வேலியும், சுற்றுப்பிரகாரமும் இருந்துள்ளது.
- 4 வாயில்களிலும் தோரணத்துக்குப் பதிலாக 5 தூண்கள் கொண்ட அமைப்பு காணப்படுகின்றது.
- தூபியின் க்ப்பக்கிரகம் செதுக்கு வேலைப்பாடு கொண்ட கற்தகடுகளால் அமைக்கப்பட்டுள்ளன.
- சைத்தியத்தின் உச்சியில் ஹர்மிகாவும் அதன் மத்தியில் குடையைத் தாங்கும் கம்பமும், அதன்மேல் குடையும் காட்டப்பட்டுள்ளது.
- அரைக்கோள வடிவில் அண்டம் அமைத்து இவற்றுக்கு உயரமான மேடை அமைக்கப்பட்டுள்ளது.
- சுற்றுப்பிரகாரம் இரண்டு தளங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

(iii) அமராவதியில் இருந்து கிடைக்கப்பெற்ற 'நாளகிரியை அடக்குதல்' என்பது உணர்வுபூர்வமான செதுக்கலாகும். அதன் கருப்பொருள், மாதிரி, சந்தர்ப்பச் சித்திரிப்பு, கலைநுட்பங்கள், உணர்வு வெளிப்பாடு ஆகிய விடயங்களை உள்ளடக்கிய மதிப்பீடொன்றை மேற்கொள்க. (10 புள்ளிகள்)

- அமராவதி சைத்தியத்தில் வட்ட வடிவ காற் தகட்டில் கிடைக்கப் பெற்ற உன்னதமான செதுக்கல் நாளகிரியை அடக்குதல் ஆகும்.
- கள் அருந்தி போதையில் இருக்கும் யானை ஒன்று தும்பிக்கையால் மனிதன் ஒருவனை இழுத்துச் செல்வதாகவும், மக்களின் பதற்றமான நடத்தையும், மேல்மாடியிலிருந்து மக்கள் சிலர் பார்ப்பதையும், இன்னொரு புறத்தில் புடைசூழ புத்தர் பிரான் வருவதாகவும், அவருக்கு முன்னால் மதம் கொண்ட யானை அடங்கி புத்தரை வணங்குவதாகவும் காட்டப்பட்டுள்ளது.
- இதில் யானைகளின் உருவங்கள் நேர்த்தியான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- இச்செதுக்கல் செயல்திறன் மிக்கதாகவும் கருத்தை வெளிப்படுத்தியும் உயர்வாக காட்டி செதுக்கப்பட்டுள்ளது.
- இச் செதுக்கல்களின் மூலம் அரண்மனைகள், தூபிகள், தோரண வாயில்கள், மக்களின் ஆடை அணிகள் திறம்படக் காட்டப்பட்டுள்ளது.
- நிகழ்வின் முக்கிய சம்பவம் பாவ உணர்வுடன் வெளிக்காட்டப்பட்டுள்ளது.
- தாழ்புடைப்பு நுட்பமுறையில் செதுக்கப்பட்டுள்ளது.

Department of Examinations

- தளம், இடப்பரப்பு உபயோகித்துள்ள விதம் சிறப்பாக உள்ளது.
- தூரப்பண்புகளுடன்உருவங்கள்ஒன்றுடன்ஒன்றுமறைந்திருக்கும்விதம்காட்டிசெதுக்கப்பட்டுள்ளது.
- உரோம பண்பை வெளிக்காட்டி செதுக்கப்பட்டுள்ளது.
- கோபம், சாந்தம் போன்ற குணாதிசங்களுடன் உடல் அசைவுகள் உயிரோட்டம் காட்டி செதுக்கப்பட்டுள்ளது.

**4.** பர்சியர்களின் செல்வாக்கினால் பாரதத்தில் முகலாயர்களின் ஆட்சிக்காலத்தில் தோன்றிய ஓவியக்கலை புதியதொரு கலை மரபாகும்.

(i) முகலாயர்களின் ஓவியக் கலைக்கு அளப்பரிய பணியாற்றிய முன்னோடியான ஆட்சியாளர்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

- அக்பர்
- ஹுமாயூன்
- ஜஹாங்கீர்
- ஷாஜஹான்
- பாபர்

(ii) இந்துசமய இலக்கியங்களினால் ராஜ்புட் கலையில் ஏற்படுத்தப்பட்ட செல்வாக்கு பற்றிச் சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

- மொஹலாய ஓவியக்கலையுடன் தொடர்புபட்டு உருவான பிரதேசக் கலைப்பாணியாக ராஜ்புட் கலையைக் குறிப்பிடலாம்.
- இதன் கலைப்பாணியை நோக்குகையில் இவை மொஹலாய ஓவியங்களை ஒத்துள்ளன.
- இந்து மரபின் தாக்கம் பெற்றதால் இவற்றின் கருப்பொருள்கள் சுதேசிய இந்து இலக்கிய எண்ணக்கருக்களையுடம் கலாசாரப் பண்புகளையும் கொண்டுள்ளன.
- பகவத்கீதை, கீதகோவிந்தம், இரகசியப்ரியா, மகாபாரதம், இராமாயணம் எனும் இந்து இலக்கிய மத நிகழ்ச்சிகளும் கதாபாத்திரங்களும் இராஜ்புட் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன.
- மேலும் அரண்மனைக் காட்சிகள், வேட்டைக் காட்சிகள், இயற்கைச் சூழல் காட்சிகளும் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன.
- ராஜ்புட் ஓவியங்கள் அங்கங்களை விபரித்துத் தன்மையில் காண்பித்தல், பொருத்தமான வர்ணக்கலவை பின்பற்றல், மென்மையான இரேகை காட்டல், முப்பரிமாணத் தன்மை காட்டல், தூரநோக்கு போன்ற பண்புகளுடன் வரையப்பட்டுள்ளன.

(iii) முகலாய, ராஜ்பூட் மரபுகளுக்கிடையே காணத்தக்க ஒற்றுமை, வேற்றுமைகளை உதாரணங்களுடன் விவரிக்குக. (10 புள்ளிகள்)

- மொஹாலயக் கலையானது பாரசீக மொகாலய மக்களின் இனத்துக்கிடையில் இருந்த தொடர்பின் அடிப்படையில் இந்தியாவில் உருவானது.
- இராஜ்புத் கலையானது மொஹாலய ஓவியக் கலையுடன் தொடர்புபட்டு உருவான பிரதேச கலைப்பாணி இராஜ்புட் ஆகும்.

Department of Examinations

**ஒற்றுமை**

| மொஹாலயக்கலை | இராஜ்புட் கலை |
|---|---|
| - தரைத்தோற்றக் காட்சிகள் விலங்கு ருவங்கள், வேட்டையாடும் காட்சிகள், யுத்தக் காட்சிகள், அரச குடும்பத்து விழாக்கள் கருப்பொருளாக அமைந் துள்ளன. | - அரண்மனைக் காட்சிகள், இயற்கைச் சூழல், வேட்டைக் காட்சிகள் போன்ற தரைத்தோற்றக் காட்சிகள் வரையப் பட்டுள்ளன. |
| - தூர நோக்குடன் உருவங்கள் விபரிப்புத் தன்மையும் மெல்லிய இரேகை பாவித்து வர்ணக்கலவையுடன் வரையப்பட்டுள்ளன. | - அங்ககளை விபரிப்புத் தன்மையில் காட்டுதல், பொருத்தமான வர்ணக் கலவையைப் பின்பற்றல், மென்மையான இரேரை காட்டல், முப்பரிமாணத் தன்மை காட்டல், தூர நோக்குக் காட்டி வரைதல். |
| - பொன்னிறம் அதிகமாக பயன்படுத்துதல். | - பொன்னிறம் பயன்படுத்தப்பட்டுள்ளது. |

**வேற்றுமை**

| மொஹாலயக்கலை | இராஜ்புட் கலை |
|---|---|
| - மதங்களைச் சாராத உலகியலுடன் தொடர்புடையதொனிப்பொருள்களைஅடிப் படையாகக் கொண்டு வரையப்பட்டுள்ளது. | - இந்து சமய இலக்கிய நூல்களி லிருந்து பெறப்பட்ட நிகழ்வுகளும் கதாபாத்திரங்களும் ஓவியங்களின் கருப் பொருளாக வரையப்பட்டுள்ளது. |

- சிறந்த ஓவியங்களாக
- பாபர் சக்கரவர்த்தியின் பூங்கா அவதானிப்பு
- அக்பர் அரசனின் யுத்தக் காட்சி

- சிறந்த ஓவியங்களாக
- இராக ராகினி ஓவியங்கள்
- இராதகிருஸ்ணனின் ஓவியங்கள்

Department of Examinations

## பகுதி 'இ'
## (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

**5.** ஐரோப்பிய ஓவியக்கலையில் தெளிவான மாற்றமொன்றை ஏற்படுத்திய கலைப்போக்கு கனவடிவவாதமாகும்.

(i) பிக்காசோ தனது கலைவாழ்வில் இனங்கண்ட காலப்பகுதிகள் **நான்கைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

- நீலவர்ண யுகம்
- இளஞ்சிவப்பு வர்ண யுகம்
- ஆபிரிக்க தாக்க யுகம் (நிக்ரோ)
- கனவடிவுவாத யுகம்

(ii) கனவடிவவாதக் கலைப் பண்புகள் பற்றிச் சுருக்கமாகப் பகுப்பாய்க. (6 புள்ளிகள்)

- கேத்திர கணித உருவங்களைப் பயன்படுத்தி நவீன பாணியில் வரைந்த ஓவியங்கள் கனவடிவ ஓவியங்களாகும்.
- இயற்கைப் பொருட்களை கனவடிவத்தில் காண்பிக்க முற்பட்டமை கனவடிவ வாதமாகும்.
- ஒரு கோணத்தில் அல்லாமல் பல கோணங்களிலும் பொருட்களை நோக்கி கேத்திர கணிதப் பண்புகளுடன் இவை கென்வஸ் மீது நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஆகையினால் பெரும்பாலான ஓவியங்கள் கட்டமைப்பில் சிக்கலான இயல்பைக் கொண்டுள்ளன.
- கனவடிவான பண்பானது அக்டமிக் யதார்த்த வாத கலைக்கோட்பாடுகளில் இருந்து மாறுபட்டது.
- கட்புலநோக்கை அவ்வாறே அனுசரிப்பதற்குப் பதிலாக கேத்திர கணித வடிவங்களின் மாறுபட்ட வெளிப்பாட்டை பலப்படுத்தியமை கனவடிவ வாதப்பண்பின் முக்கிய அம்சமாகும்.
- கனவடிவ வாதப் பாணியில் முன்னோடி கலைஞர்களாக பிக்காசோ, ஜோஜ் பிராக் கூறப்படுகின்றனர்.

(iii) 'அவிக்னோனின் பெண்கள்' என்ற ஓவியத்தின் மாதிரி, செல்வாக்கு ஆகிய விடயங்களை உள்ளடக்கிய மதிப்பீடொன்றை மேற்கொள்க. (10 புள்ளிகள்)

- கனவடிவவாதப் பண்புகளுடன் பிக்காசோவினால் வரையப்பட்ட முதல் படைப்பான ஓவியமாகும்.
- 1907 ஆம் ஆண்டு Canvas oil வர்ணத்தினால் வரையப்பட்டது.
- இவ்வொவியம் ஓவியக் கலை வரலாற்றில் வடிவமைப்புக் கலை மோடிப்படுத்துவதில் வெற்றிக் கொண்டது.
- நிர்வானமாக 5 பெண்களைக் கொண்ட ஓவியமாகும்.
- எக்கடமிக் கலையில் காணப்படும் பெண்களின் லலிதமான போக்கை விடுத்து கேத்திரகணிதப் பண்புகளுடன் வரையப்பட்டுள்ளது.
- அவிக்னோன் வீதியின் விலைமாதர்களின் அவல நிலையை கருப்பொருளாகக் கொண்டு வரையப்பட்டுள்ளது.
- இதில் பெண்களின் வெளிப்புற அழகை விட உள்ளக் குமுறல்கள் ஆணித்தனமாக வெளிக்காட்டி வரையப்பட்டுள்ளது.
- அக்கடமிக் யதார்த்த கலையின் தூர நோக்கு முப்பரிமாணப் பண்புகளின்றி விடயம் தொடர்பான தூரப் பண்பு முப்பரிமாண பண்பு கொண்டு வரையப்பட்டுள்ளது.
- பெண்களின் உடல் நிலைகளும் உணர்வு வெளிப்பாடும் வெளிப்படுத்தியுள்ள விதம் போற்றத்தக்கது.
- ஆபிரிக்க வேட முகங்களின் காணப்படும் ஆழமான வெட்டுக்களுடன் கூடிய இயல்புகள் உள ரீதியான எதிர் நிலையை பெண்களின் முகங்களின் மூலம் காட்டி வரையப்பட்டுள்ளது.

Department of Examinations

**6.** கிரேக்கர்கள் ஆரம்ப காலத்திலிருந்தே சிலைக் கலையில் ஆற்றல்களை வெளிப்படுத்திய திறமையான நிர்மாணிப்பாளர்கள் ஆவர்.

(i) கிரேக்கச் சிலைகளுள் காணத்தக்க பெண் சிலைகள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக.(4 புள்ளிகள்)

- அதீனா சிலை
- வீனஸ் த மெலோ
- சுமோதராஸின் வெற்றி தேவதை
- வயோதிக பெண் வியாபாரி

(ii) செந்நெறிக் காலத்திற்குரிய 'ஹேர்மிசும் டயோனியசும்' என்ற சிலை பற்றிச் சுருக்கமாக அறிமுகம் செய்க. (6 புள்ளிகள்)

- செந்நெறி காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட உன்னத சிலையாக ஹேர்மிசும் டயோனிசும் சிலை கூறப்படுகிறது.
- பிரக்சிடேல்ஸ் சிற்பியால் நிர்மாணிக்கப்பட்டது.
- கிமு 4 ஆம் நூற்றாண்டில் சலவைக் கல்லை ஊடகமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.
- இவ்சோடிச் சிலை 7 அடி 1 அடி அங்குலம் கொண்டது.
- முழு நிர்வாண உடலமைப்பைக் கொண்ட இளைஞனாக ஹோர்மிசின் உருவமும் அவரது கையில் டயோனிஸ் எனப்படும் குழந்தை உருவமும் செதுக்கப்பட்டுள்ளது.
- ஒரு காலை ஊன்றியபடி வலிமையான கிரேக்க உடலமைப்பைக் கொண்டு செல்லப்பட்டது.
- முழுமையான நிறைவான உடலமைப்பை ஹோர்மிசின் உருவத்தில் காட்டியுள்ளனர்.
- குழந்தை டயோனிசின் உருவம் சரியான அளவீட்டின் படி காட்டாமல் உள்ளது.
- ஹோர்மிசின் இடது கையிலிருந்து கீழே தொங்கவிடப்பட்ட துணியானது குழந்தையை ஏந்தி நிற்கும் கை முறிவதைத் தடுப்பதற்கு எடுத்த நுட்ப பிரயோகமாக கூறப்படுகிறது.
- ஹேர்மிசின் உயர்த்தப்பட்ட வலக்கையில் திராட்சைக் குளையொன்று இருந்ததாக கூறப்படுகின்றது.

(iii) ஹெலனிஸ்டிக் காலத்திற்குரிய 'லவகூன்' சிலையின் ஊடகப் பயன்பாடு, கலைநுட்பம் ஆகியன பற்றி விவரிக்குக. (10 புள்ளிகள்)

- ஹெலெனிஸ் ரிக் காலத்துக்குரிய உன்னதமான படைப்பாக லகூன் சிலை கூறப்படுகிறது.
- சலவைக்கல்லை ஊடகமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.
- ரோஜன் பாதிரியாரும் அவருடைய இரு மகன்களும் துன்பகரமான நிலைக்கு உள்ளானதை வெளிக்காட்டுகிறது.
- கடலிலிருந்து தோன்றிய ஒரு பாம்பு பாதிரியாரையும் இரு பிள்ளைகளையும் சுற்றிக் காணப்படுகிறது.
- இவர்கள் மூவரும் பாம்பின் பிடியிலிருந்து தப்பிக்க முயலும் நிர்மாணிப்பாகும்.
- இவர்கள் மூவரின் உருவங்களும் வேதனையுடன் கூடிய உணர்வுடன் வெளிக்காட்டப்பட்டுள்ளது.
- துன்பத்தை வெளிப்படுத்தும் பாவ உணர்வு இச்சிலை மூலம் வெளிக்காட்டப்பட்டுள்ளது.
- மூன்று உருவங்களும் மூவகையான உடல் நிலைகளை குறித்து நிற்பதுடன் உடற் கட்டமைப்பு யதார்த்தமாகவும் இயற்கை பண்புகளுடனும் செதுக்கப்பட்டுள்ளது.
- கிமு 25 இல் நிர்மாணிக்கப்பட்ட இச்சிலையானது மறுமலர்ச்சிக்கால கலைஞர்களுக்கு செல்வாக்கைச் செலுத்திய படைப்பாக கூறப்படுகிறது.

Department of Examinations